**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV,BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.741/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 4 |
| Name | : | பாலமுருகன், வயது 21 |
| Father Name/Husband Name | : | படைவேல்சாமி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of January 2026.

**(Accused present).**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் கோவில்பட்டியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். கடந்த 27.11.2024 ஆம் தேதி மாலை 06.40 மணியளவில் நானும், சேர்மராஜ் என்பவரும் கொத்தனார் வேலை முடிந்து லாயல் மில் காலனி கேட் அருகே பைக்கில் சென்று கொண்டிருக்கும்போது அப்போது முத்துவீரனும், முக்கையாவும் அவர்களுக்கு சொந்தமான TVS XL வண்டியில் முத்துவீரன் ஓட்ட மூக்கையா பின்னால் உட்காாந்து பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது லாயல் மில் கேட்டுக்கு வளைவில் மினி பஸ் ஒன்று கவனக்குறைவாக வந்து TVS XL வண்டி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது.

2. அந்த விபத்தில் முத்துவீரனுக்கு இடது முட்டுக்கு மேலே காயம் ஏற்பட்டது. மூக்கையாவுக்கு வலது முட்டில் காயம் ஏற்பட்டது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு நானும், சேர்மராஜ் என்பவரும் காயம்பட்ட முத்துவீரன் மற்றும் மூக்கையாவை அழைத்து சென்றோம். விபத்தை ஏற்படுத்திய மினி பஸ் ஓட்டுனரை நான் பார்த்தேன். ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்திய மினி பஸ்ஸின் ஓட்டுனர் ஆவார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

<u>3.</u> நாங்கள் அனைவரும் ஒரே வீட்டில்தான் வேலை பார்த்தோம். எனக்கு லாயல் மில் காலனி, புதுகிராமம், முகமது சாலிகாபுரம் ஆகியவைகளை தெரியும். நான் காந்தி நகரில் குடியிருக்கிறேன். நாங்கள் கொத்த வேலை செய்த வீடு லாயல் மில் காலனிக்கு அடுத்துள்ள மறவர் காலனி ஆகும். மறவர் காலனி கடலையூருக்கு செல்லும் ரோட்டில் உள்ளது. கடலையூர் ரோடு என்பது ஆர்.டி.ஓ அலுவலகத்திலிருந்து ஆரம்பித்து மறவர் காலனி, லாயல் மில் காலனி, பங்களா தெரு வழியாக வந்து அரசு மருத்துவமனையில் முடியும். லாயல் மில் காலனியிலிருந்து வரும் ரோடு எஸ் டைப்பில் மாதிரி திரும்பி பங்களா ரோட்டில் வரும்.

4. முத்துவீரன் சென்று கொண்டிருந்த வண்டிக்கும், நாங்கள் சென்று கொண்டிருந்த வண்டிக்கும் சுமார் 50 அடி தூரம் இருக்கும். பஸ்ஸின் முன் வலது பக்கத்தில்தான் மூக்கையா, முத்துவீரன் அடிபட்டு விழுந்தார்கள். காயம்பட்டவர்கள் அந்த ரோட்டின் வலது புறத்தில் அடிபட்டு விழுந்தார்கள். பொதுவாக அனைவரும் இடதுபுறம்தான் ரோட்டில் செல்ல வேண்டும் என்றால் சரிதான். விபத்து நடக்கும்போது நான் பஸ்க்கு பின்புறத்தில் இடது பக்கத்தில் வந்தேன். நான் பின்புறம் இருந்ததால் முன்னால் எவ்வாறு விபத்து நடைபெற்றது என்று பார்க்க இயலாது என்றால் சரிதான். இன்று நீதிமன்றத்திற்கு வெளியே எவ்வாறு சாட்சியம் அளிக்க வேண்டும் என்று போலீசார் படித்து காட்டினார்கள் என்றால் சரியல்ல.

5. கவனகுறைவு என்பதற்கான அர்த்தம் எனக்கு தெரியும். கவனக்குறைவு எவ்வாறு இருந்தது என்று குறிப்பிட்டு போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. 108 ஆம்புலன்ஸ்க்கு கனகராஜ் என்பவர் தகவல் கொடுத்தார். கனகராஜ் சம்பவ இடத்தில் இருந்தார். கனகராஜ் என்னுடன் வேலை பார்த்தவர். கடலையூர் ரோட்டிலிருந்து நான் குடியிருக்கும் காந்தி நகருக்கு செல்ல வேண்டும் என்றால் கடலையூர் ரோட்டிலேயே வந்து சென்றுவிடலாம் என்றாலும், புதுகிராமத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரிதான்.

6. மருத்துவமனைக்கு நானும் சென்றேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னிடம் புகார் பெற்றார்கள் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் என்னுடன் வந்தவர்கள் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் சரியல்ல, சேர்மராஜ் என்பவர் மட்டும் கையொப்பம் செய்தார். நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் எந்த விபத்தும் நடக்கவில்லை என்றாலும், நான் இந்த வழக்கிற்கு

கண்கண்ட சாட்சி கிடையாது என்றாலும், போலீசார் அறிவுறுத்தலின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.